# ஜீலை மாத அமாவாசை பெருவிழா சாட்சியங்கள்

**1. ரோசலிமேரி - நூரலை**



ஆறு வருடங்களாக ஆஸ்துமா இருந்தது. மூன்று ஆண்டுகளாக அமாவாசை ஜெப கூட்டத்திற்க்கு வந்து கொண்டியிருக்கிறேன். நான் இப்போது குணமடைந்துள்ளேன். என் கணவர் விபத்தில் அடிபட்டு கால் எலும்பு முறிந்துவிட்டது. மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்த்தோம். மருத்துவர்கள் உயிருக்கு ஆபத்து என்றுக் கூறிவிட்டார்கள். எம்மாவுஸ் எண்ணெயைத் தடவி செபித்து வந்தேன். மூன்று மாதத்திலே சுகம் பெற்று என் கணவர் எழுந்து நடக்கச் செய்த இறைவனுக்கு நன்றி!

**2. விமலா - நெய்வேலி**



எனக்கு வயிற்றில் இரண்டு கட்டிகள் இருந்தது. நான் மருத்துவரிடம் சென்றேன். உடனே அறுவை சிகிச்சை செய்யும்படி மருத்துவர் கூறிவிட்டார். எனக்கு உடனே அறுவை சிகிச்சை செய்தார்கள். கட்டி புற்றுநோய் கட்டியாக இருக்கும் என்று கூறி பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும் என்று கூறிவிட்டார்கள். நான் சாதாரண கட்டியாக இருக்க வேண்டுமென்று செபித்தேன். சாதாரண கட்டி என்று பரிசோதனை மூலம் தெரிவித்தார்கள். இயேசுவுக்கு நன்றி!

**3. நஞ்சப்பன் - விருத்தாசலம்**



என் பக்கத்து வீட்டு சகோதரருக்கு மூளையில் இரத்த கசிவு இருந்தது. அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். என்று மருத்துவர் கூறிவிட்டார். நான் எம்மாவூஸ் எண்ணெய் தடவி செபித்தேன். நல்ல முறையில் அறுவை சிகிச்சை நடைபெற்று சுகமாக உள்ளார். இயேசுவுக்கு நன்றி!



**4. ஆசீர்வாதம் - ஏமம்**

நான் மாடு தள்ளி கீழே விழுந்து விட்டேன். என் கால் உணர்ச்சியில்லாமல் நடக்க முடியாமல் இருந்தேன். எங்கு சென்றும் குணமாகவில்லை. எம்மாவூஸ் வந்து செபித்தேன் எண்ணெய் தடவி வந்தேன். இப்போது நடக்கிறேன். இயேசுவுக்கு நன்றி!

5. RM **ஆஞ்சிஸ் சூசைமாணிக்கம் - கோபிசெட்டிபாளையம்**

கடந்த மே மற்றும் ஜீன் மாதங்களில் எங்கள் இளைய மருமகள் கடும் காய்ச்சலால் அவதிப்பட்டு வந்தாள் என்ன காய்ச்சல் என்று கண்டுபிடித்ததில் பன்றிக்காய்ச்சல் தொற்று எனக்கூறினார். எம்மாவூஸ் ஆண்டவரிடம் உருக்கமாக செபித்து மருத்துவம் மேற்கொண்டதில் அதிசயத்தக்கவிதமாக குணமானாள். இதேபோல் என் கணவரும் கடும் காய்ச்சலுக்குப்பட்டு எம்மாவூஸ் ஆண்டவரால் குணம் பெற்றார். எனக்கு ஜீலை மாதத்தில் வைரஸ் ஜீரத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு இறைவன் மீது நம்பிக்கையுடன் செபித்தோம். குணம் பெற்றேன். எம்மாவூஸ் ஆண்டவருக்கு நன்றி!



6. **செ. தேவமேரி - தங்கச்சிமடம்**

கடந்த பல வருடங்களாக எனக்கு வயிற்றுக் கோளாறு இருந்து வந்தது. எந்த உணவுமே எனக்குச் சேராமல், தொடர்ந்து மருந்து மாத்திரைகள் சாப்பிட்டு வந்தேன். ஆனால்; "கடவுளே! உமது பேரன்புக்கு ஏற்ப எனக்கு இரங்கும்" என்னும் திருப்பாடல் வரிகளை எனது செபமாக்கி ஆண்டவரின் இரக்கத்தையும் மன்றாடினேன். அத்தோடு 'எம்மாவுஸ்' இதழ் வழியாகவும் நான் ஆறுதல் அடைந்தேன். தங்களிடமும் செபவேண்டுதல் கேட்டு விண்ணப்பித்தேன். ஆண்டவர் என் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்து - எனக்குப் பூரண சுகம் தந்துள்ளார். ஆண்டவர் இயேசுவுக்கு என்றென்றும் மாட்சியும் மகிமையும் உண்டாவதாக!



**"உன்னத இறைவன் உனக்குத் கொடுத்திருப்பதற்கு ஏற்ப நீயும் அவருக்குக் கொடு; ஆண்டவரே கைம்மாறு செய்பவர்; ஏழு மடங்கு உனக்குத் திருப்பித் தருபவர்". (சீரா.35:9,10)**

**எம்மாவுஸ் ஆன்மீக மையத்தின் வளர்ச்சியை விரும்பும் நல் உள்ளம் கொண்ட பங்காளர்களே, நன்கொடையாளர்களே, ஜெபபரிந்துரையாளர்களே, தன்னார்வத் தொண்டர்களே உங்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த நன்றியினையும், ஜெபங்களையும் உரித்தாக்குகிறேன். காணிக்கை கொடுக்கும் ஒவ்வொருவரும் தங்களது பெயர் முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை எங்களுக்கு தெளிவாக தெரியப்படுத்தவும். வங்கியின் மூலம் செலுத்துபவர்கள், நீங்கள் பணம் அனுப்பிய பிறகு கீழ்கண்ட தொலைபே எண்ணிற்க்கு உங்களின் விபரங்களை தெளிவாக எங்களுக்கு அனுப்பவும், இணையதளத்தின் மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ உங்கள் தகவல்களை எங்களுக்கு அனுப்பலாம். இது நாங்கள் உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்திற்க்காகவும் ஜெபிக்கவும், திருப்பலி ஒப்புக்கொடுக்கவும் உதவியாக இருக்கும். உங்கள் ஜெபவிண்ணப்பங்களையும், கருத்துக்களையும் அனுப்பலாம்.**

**–இயக்குனர்.**

**தொலைபேசி எண் : 9865290550**

இணையதள முகவரி : www.emmausspiritualitycentreindia.com
மின்னஞ்சல் முகவரி : emmausspiritualitycentretn@gmail.com